-/25.

உ
சிவமயம்



நயினை நாகேஸ்வரப்பதி

# ஸ்ரீ நாகபரமேஸ்வரியம்மை

# தோத்திர விருத்தம்

இயற்றியவர் :


இசைமணி, ஆ. மு. சுப்பிரமணியம் அவர்கள்
நயினை - யாழ்ப்பாணம்



இரண்டாம் பதிப்பு 1967 பிலவங்கச் சித்திரை

உ

சிவமயம்



நயினை நாகேஸ்வரப்பதி

# ஸ்ரீ நாகபரமேஸ்வரியம்மை

# தோத்திர விருத்தம்

இயற்றியவர்:

**இசைமணி, ஆ. மு. சுப்பிரமணியம் அவர்கள்**

நயினை—யாழ்ப்பாணம்

இரண்டாம் பதிப்பு: 1967 பிலவங்க—சித்திரை

# முகவுரை

நம் ஈழநாட்டில் புராதனமாய் நயினையம்பதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ நாகபரமேஸ்வரி அம்மையாரை இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மாத்திரமல்ல மற்றும் சமயத்தவரும் சென்று வழிபடுகிறார்கள். எல்லா மக்களுக்கும் அருள் பாலிக்கும் நாகபரமேஸ்வரியின் அருட்டிறன் எங்கள் நாவால் சொல்லும் திறத்தன்று.

அம்பிகையின் மேல் எழுந்த பக்திப் பரவசத்தால் சிறியேனாகிய என் இதயத்தில் இருந்து எழுந்த சில பக்திப் பாடல்களை எனது கையால் எழுதினேன். அக்கவிகளை மற்றவர்களும் படித்து அம்பிகையின் கிருபாகடாட்சத்தைப் பெற்று உய்யும்பொருட்டுத் திருவருள் துணை கொண்டு இந்நூலை வெளியிடுகின்றேன். இக்கவிகளில் ஏதும் குறைகள் இருப்பின் அவற்றைப் பொருட்படுத்தாது பக்திப் பாவசத்தால் யார்த்த கவிகளாகக் கருதி இதைப் படித்துப் பயன்பெறுமாறு அம்பிகை சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

நாகேஸ்வரப்பதி, இங்ஙனம்
நயினை ஆ. மு. சுப்பிரமணியம்
யாழ்ப்பாணம்.
28-6-66

நாவலன் ஆசிரியர்,

## நகுலகணேசன் அளித்த

# அணிந்துரை.

கற்பகக் கன்றைக் கான்மயிலேறும்
குறவன் அன்னைதனை
மற்றவர் போற்றும் மாயவனை
சோதரி மாவல்லியை
சிற்பவன் சிறுமியை சுப்பிரமணியன் சீரில்
சிறை கொண்டவனை
தற்பதியாய நயினையிற் சென்றுநாளும்
வணங்குவமே.

ஸ்ரீ லங்கா சைவாதீனம்,
யாழ்ப்பாணம்.

நகுலகணேசன்

சிவமயம்

நயினை நாகேஸ்வரப்பதி

## ஸ்ரீ நாகபரமேஸ்வரி அம்மை

# தோத்திர விருத்தம்

இசைமணி, ஆ. மு. சுப்பிரமணியம் அவர்கள்

### விநாயகர் வணக்கம்
### நேரிசை வெண்பா

பூரனே காரணனே பூதகண நாயகனே
வீரசக்தி ஞான விநாயகனே—சீரகத்தால்
இங்கு நயினை யிறைவிக்குப் பாப்புனையக்
கங்கையணி மைந்தனே நீ காப்பு

### ஆசிரிய விருத்தம்

அண்டமுதல் புவனங்கள் யாவுமே தாமாகி
அயன் அரி உருத்திரனுமாய்
ஆதியாய்ப் பிரணவ சொரூபியாய் உலகுக்கோர்
அன்னையென வந்ததாயே
குண்டலினி சக்தியே உலகுய்ய உண்மைநிலை
கொடுத்தருளும் ஓம்சக்தியே
குஞ்சர முகக்கடவுள் கருணையாம் முருகனைக்
கொடுத்தாண்ட பரதெய்வமே
கண்டத்தில் கொடுவிஷம் உண்டஅரன் பாகியே
காமசிவ காமபீடக்
கயிலாச மாம்நயினை நாகேஸ் வரப்பதியின்
கலைகொண்ட குலவிளக்கே
பண்டமரர் தொழுதேத்தும் பேரின்ப வெள்ளமே
பக்குவ நிலையிளொளியே
பக்தர்தவ மெய்யடியார் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

ஞானச் சுடரொளி மிளிர்வதன சோதியே
நாகரத்னப் பதியழகியே
நாதாந்த மோனநிலை காட்டிமறைந் தருள்கின்ற
நாகர்பணி மணிவிளக்கே
வானவர்கள் தாமறியா நெறிதந்து ஆட்கொண்டு
நல்கியிருள் அழித்திகபரம்
நவின்றருளும் நாயகி நாகநயி ஞர்கள்தொழும்
நாகபூஷணு அம்பிகே
கானக் குறமாது மருவுகும ரேசனின்
கருத்தின்வடி வானதாயே
கண்ணினிரு கண்மணி நயினைநாகேஸ் வரப்பதியிற்
கவினுற வமருவாயன்
பானநிதி லக்ஷ்மியும் கானநிதி வாணியுமென்
பத்மாசனி யையையாகி
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

வாழ்விக்க வந்தமெய்ஞ் ஞானத்தின் பீடமே
வருமறை சதுர்க்குன்றமே
மறைதேடி யுங்காணு வானவர்கள் போற்றிடும்
மகாதேவி உமாமகேஸ்வரி
தாழ்மைகொண் டுனைத்தினம் நினைந்துருகு மடியர்வினை
தவிர்த்தருளி யானந்தமே
தந்தருளும் அன்னையே காமகோடிக வீன்றஎன்
தாயான புவனேஸ்வரி
ஆழ்கடல் அலையாழி சூழ்நயினை நாகேஸ்வரப்பதி
அமர்ந்திடும் நாகேஸ்வரீ
அகிலாண்ட அம்மையே ஆதார சக்தியாம்
அன்பருளம் நிலவுமுமையே
பாழ்கொண்ட என்நெஞ்சில் நீங்காது உறைகின்ற
பர்வதா சிரோன்மணியெனும்
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

நந்தாவிளக் கொளியை ஞானத்தின் பீடமுயர்
நாகமணி நாயகித்தாய்
நவலோக அண்டரொடு தொண்டரும் வேண்டிட
நாராயணி யாகியே
சிந்தைதனில் அனல்வீச சிம்மவா கனத்தமர்ந்து
திரிசூலம் வலக்கையேந்திச்
சினங்கொண்டு தாவியே மகிடாமா சூரனின்
சிரங்கொய்த உலகன்னையே
கந்தமாதனி காங்கேயனை யீன்ற அருட்பெருங்
கருணையங் கடலமுதமே
கார்க்குமொரு தாயான நயினைநாகேஸ் வரப்பதியின்
கௌரியெனும் நவசக்திசம்
பந்தருக் கருளுதவ வந்தகரு மாட்சியே
பார்வதிப் பெயர்கொள் நிதியே
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

அன்னையாய்த் தந்தையாய் யாவுமாய் நின்றஒரு
அருவுருவ மானஜோதி
ஆதியொடு அந்தமும் நடுவாகி நிலைநின்ற
அரனிடப் பாகவுமையே
புன்முறுவ லாகிமக பூதகண தலைவனை நின்
பொற்கரம் தாங்கியருளி
பொருதியே வருசூரன் மார்பைப் பிளக்கவேல்
புதல்வனுக் கீந்ததாயே
கன்மாதி கன்மமிமலும் மாயையில் அலைந்துழலும்
கபடனுக் கருள்புரிகுவாய்
கருணைக்கோர் தலமுயர் நாகேஸ் வரப்பதியின்
கற்பகத் தருவுமாகிப்
பன்னலங் காட்டிவரு பொன்னினம் பலவரொடு
பாவியேன் பௌவநீக்க
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

கண்ணு அனது திருப் பாதார விந்தமதைக்
கண்டுளம் வெதும்பியன்புக்
கண்ணினீர் மல்கியிரு கரம்கூப்பி நின்கோவில்
காலால் வலஞ்செய்யவும்
பண்ணால் இசைந்துநின் புகழ்பாடி ஆடியும்
பரவசம் கொண்டோடியும்
பாருலகி லுன்பெருமை தினங்கூறி யழுதிடும்
பாலனெனை ஆண்டருளுவாய்
உண்ணா முலையுமை யானென் றனைத்துயிர்க்கும்
ஓம்சக்தி வடிவுகாட்டும்
உத்தமியென் பவானியே நாகேஸ் வரப்பதியின்
உறைந்தருளும் நாமதாரி
பண்ணவளே நினைப்பரவும் அடியர் துயர்தீர்த்த
பக்குவப் பேரின்பமே
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

பாதிமதி சூடிய பரப்பிரம்ம நாயகனிடப்
பாகமுறு பராசக்தியே
பண்புடன் நினதுபுகழ் பாடும்நின் னடியவர்கள்
பவவினைகள் தீர்த்தருளுவாய்
சோதிப் பிழம்பெனும் சொலற்கரிய அட்சரமே
சுத்தநிர்க் குணக்குன்றமே
சூதுவா தறிகிலேன் நின்னடியை நம்பினேன்
சோதியா தாட்கொள்ளுவாய்
ஆதிநா ராயணன் அரும்பெரும் தங்கையே
அபிராம சுந்தரியென்னும்
அருள்சொரியும் நயினைநா கேஸ்வரப் பதியின்
அகிலாண்ட நாகம்மையே
பாதியா னிடங்கொண்ட பார்வதியெ னீஸ்வரி
பாருலகில் ஆட்கொள்ளுவாய்
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

மலையத் துவச பாண்டியன் மகளான
வளர்நயினை மா நகர் அரசியே
மாமேரு கிரிதனில் இறைவனுடன் இடப்பாகம்
மருவிவருமலை மங்கையே
நிலையாக வுனைத்தினம் நினைத்துருகும் அடியவர்தம்
நெஞ்சில் நிலவும்மணியே
நித்யகல் யாணகுண பூஷணி சுமங்கலி
நீலாய தாட்சிஉமையே
கலையான மீனாட்சி நயினைநா கேஸ்வரப் பதியின்
கமலாசனத் தழகியே
களைகொண்டுன் அருள்நாடி நிற்கின்ற அடியனேன்
கவலைதீர்த் தருள் புரிகுவாய்
பலகலைச் சக்தியே யீழநாட் டிறைவியே
பரப்பிரம மானபொருளே
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

---

அம்புவியில் நம்பிவழி படும்அடி யவர்க்கென்றும்
ஆறுதல் தரும்அம்மையே
அகிலாண்ட நாயகிநின்னருள் மகிமையை
அடியேன் இயம்பவெளிதோ
செம்பொற்பதமெனும் சாயுச்சிய மோட்சநிலை
தெளிவித்த தெள்ளமுதே
தேவாதி தேவர்முதல் மூவர்பணி துதிகொள்ள
ஜெகநாத ராஜேஸ்வரி
உம்பர்தொழு தேத்துமிப் பதிதனில் உயிர்க்குறும்
உடற்பிணி பவப்பிணியற
ஒழித்தருளும் அன்னையே நயினைநா கேஸ்வரப்பதியின்
ஓங்கார ஓம்சக்தியே
பம்புதற் சிந்துபுடை கொண்டுமிளிர் நயினையிற்
பலனுதவ வந்ததாயே
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

மனமுவந்தே நினதுதிரு மலரடி நினைப்பவர்தம்
மனதிலுறை மாணிக்கமே
வளர்பிறை சடையணியும் புவியேந்தியெம் நாகேஸ்
மருவுமிடப் பாகத்தியே [வரன்
கனவிலும் நனவிலும் என்னிதயம் குடிகொண்ட
கருணாகரத் தெய்வமே
கருணையே யுருவாகி அருளமுது தரும் நித்ய
கல்யாணி உனை நம்பினேன்
தினந்துதிப் பவர்வாழ்வு பெருவாழ்வு ஓங்கவே
சித்தியொடு முக்தியருளும்
தேவாதி தேவியே நயினை நா கேஸ்வரப்பதியின்
திறல்கொண்ட சுடர்க்கொழுந்தே
தனமெனும் பதினாறு பேறுதந் தருள்புரியும்
தத்துவப் பொருள் உன்னையே
பக்தர்தவ மெய்யடியர் ரிஷிபுங்கவர் தொழும்நாக
பரமேஸ்வரி அம்மையே.

---

ஓடைக்காடெனும்பதி
ஸ்ரீ சுப்பிரமணியர் துதி

ஆரணி சடைதாங்க பூரணனைச் சிரத்தணி
ஆதிசிவன் அருமைமகனே
ஐங்கரற் கிளையவா வள்ளி தெய்வானையுடன்
ஆடுமயில் ஏறும்அழகா
தீரனே குறுமுனிக் குபதேசம் செய்தவுயர்
சிங்கார வடிவேலனே
தீராத வல்வினைகள் தீர்த்தருளும் சண்முகா
செங்கண்மால் மருகககனே
காரணி யெனும்நாக பரமேஸ்வரி மைந்தனே
நாதாந்த முத்திமுதலே
நலம்கொண்ட ஸ்ரீஓடைக் காடுதனி கொண்டவா
குருநாத முருகவருக
சூரசம் மாரனே ஆறுபடை வீடுடைய
செல்வகுமரேசநாமம்
திகழ்நயினை நாகேஸ் வரப்பதிவாழ் கந்தனுயகன்
வருகஅருள் தரவருகவே.

## ஸ்ரீ மீனாட்சிஅம்மை துதி

மால்அயனும் காணரிய அனற்பிழம் பாய்நின் றதோர்
சோதியின் வடிவினில் கலந்து மருவி
மறைதனக் கெட்டாத பேரின்ப வாரிதியே வானவர்கள்
போற்றிடும் மரகத மணிக்குன்றமே
சீலமுடன் உன்நாமம் தினந்தினந் துதித்திடு மடியார்
துயர்தீர்த்த கருணை வடிவே
சொலற்கரிய ஞானமாம் வீட்டின்பப் பேறுதரு நிதியான
தேவியே உனைவேண் டினேன்
காலன்வந் தெனையணுகு முன்னிவது கிருபா கடாட்சம்
காத்தருள் புரிய வேண்டுமம்மா
கல்கைபுனைநாயகன் இடப்பாகம் மேவிவளர் அன்னையே
கற்பகத் தருவின் கனியே
ஆலவாய் மதுரைநகர் அரசியே நயினைநா கேஸ்வரப்பதி
அமர்ந்திடும் கரச்சியம் பதியழகியே
அன்னையே முத்திக்கு வித்தான ஒருதெய்வமென வந்தாள்
அம்மை மீனாட்சி உமையே.

## தில்லைப் பிடாரிஅம்மை துதி

அஷ்டமா மூர்த்தியே அகிலமுதலன்னையே அபிராமி சுந்தரிதனை
ஐம்மூர்த்தி களுமை வணங்கிட
ஆதியொடு அந்தமுத லீருன பலகோடி தனையீன் றளித்த என்
அம்மையே உனைவேண் டினேன்
நிஷ்டையி லிருந்துனை வளிபடும் தொண்டர் துயர்
நீக்கியாண் டருளும்அம்மா
நிகரிலாப் பிரணவ சொரூபியே மெய்யடியார் நெஞ்சினில்
நீங்காது நிறைவாகி நின்றபொருளே
துஷ்டநிக்ரக சிஷ்டபரி பாலியே தேவரொடு மூவரும்
துணையென வேண்டி நிற்க
தூர்த்தமாய் எதிர்முடுகு மகுடமாசுரனின்சிரங்கொய்ததேவியெனும்
துர்க்கையே உனைவேண் டினேன்
இஷ்டமுடன் ஆனந்த தாண்டவத் திருநடன மாடிமகிழ்
சித்தான மலைமங்கையே
சித்தமிசை குடிகொண்ட நயினைநா கேஸ்வரப்பதியின் தெய்வமே
தில்லைப் பிடாரி உமையே.

## வாழ்த்து

ஒன்றுமுத லாய்வந்த அரியசிவ சமயமும்
உற்றதோ ரரசும் வாழ்க
உன்னைவளி படுகின்ற அடியவர்க ளர்ச்சகர்கள்
உள்ளசித் தாந்தம் வாழ்க
மன்றுதனி லாடுமரன் கண்டமணி கண்டிகை
மந்திரமார் நீறும் வாழ்க
மன்னவர்கள் முனிவர்பன் னியர்களொடு தொண்ட
மாநிலத் துழவர் வாழ்க [ரும்
நின்றுனது ஆலயம் வீதியுப சாரபொருள்
நித்திலத் தாவும் வாழ்க
நிலையான நின்புகழ்ப் பாதார விந்தமது
நினைப்பவர்கள் கூடி வாழ்க
கொன்றைமதி ஆத்தியர வறுகுபுலி ஆடையனல்
கொண்டசிவ னருளி னாலே
குவலயம் புகழவரு நயினைநா கேஸ்வரப்பதி
குடிகொண்ட நாக பரையே.



விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம் 183-67

# விளம்பரப் பா

1. மில்க்வைற் நீலசோப் மில்க்வைற் நீலசோப்
சில்க்கொற்றன் நைலோன் கம்பளித் துணிவகைச்
சலவை வேலைக்கு வேண்டிய துகந்தது
நலமாய்த் தூய வெண்மையைத் தருவது — மில்

2. விஞ்ஞான ரீதியில் விற்பன ரறிவினில்
நம்நாட்டுத் தேவைக்குத் தயாரித்து விற்பது
சிக்கன முறையைச் சீரிய தரத்தை
எக்காலும் எமக்கு எடுத்தெடுத் துரைப்பது – மில்

3. பாலர்கள் வாலிபர் வயோதிபர் அன்பர்கள்
காலம் தாழ்க்காது கடிதினில் நீலசோப்
வாங்குங்கள் வாங்குங்கள் கேட்டுநீங்கள் வாங்குங்கள்
எங்கள் சோபிதநீல சோப்பையே வாங்குங்கள்– மில்

சுபம் ! வாழ்க !

## மில்க்வைற் சோப் தொழிற்சாலை

தொலைபேசி : 7233

527, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்


விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்